


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுநயம் மறைத்தல்

## (மெய்ப்பாடு)

கு.றஜீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நகுநயம் மறைத்தல்"
கவிதை

எழுதியவர்
கு. றஜீபன

வெளியீடு
சித்திவிநாயகர் நூல்நிலையம்
ஏழாலை மேற்கு

பதிப்பு
சித்திரை 2011

அட்டை, நூல் வடிவமைப்பு
வி. செந்தில்குமரன

அச்சுப்பதிப்பு
சாய்ராம் பிரின்டேஸ

விலை
150.00

# இதழ் விரிப்பு...

"நகுநயம் மறைத்தல்" எனது ஐந்தாவது கவிதைத் தொகுப்பாகும். இது அகத்துறை சார்ந்தது. தொல்காப்பிய பொருளதிகாரம் கற்கும் போது அதன் மெய்ப்பாட்டியலில் வரும் சூத்திரம் ஒன்று என்னை வெகுவாகப் பாதித்தது அந்தப் பாதிப்பின் விளைவே இக்கவிதை நூலாகும். ஆகையால்தான் அந்தச் சூத்திரச் சொல்லையே இந்தநூலுக்கான தலைப்பாக வைத்திருக்கிறேன்.

தமிழ் இலக்கியம் நீண்ட நெடிய பரப்பைக் கொண்டது. அதில் மூழ்கித்திளைத்தவன்தான் உண்மையான கவிஞன். இலக்கியக் கட்டுடைப்பு என்னும் கோட்பாடு தமிழ் இலக்கியத்துக்குள் வந்த பின்பு ஏற்பட்ட நவீன இலக்கிய வளர்ச்சியில் தமிழ் இலக்கியம் புதுப்பொலிவு பெற்றது. எனினும் அதற்காக எமது முதுபெரும் முதுசத்தை விட்டுவிடலாகாது.

கவிதை என்பது ஒரு அழகான புரிதல்மொழி அதை எந்த வடிவத்தில் வேண்டுமென்றாலும் பாடலாம். ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு வகையான இலக்கிய வகைமைகளைக் கொண்டது. இங்கு தொகுக்கப்பட்டிருப்பதும் அகத்திணை இலக்கிய வகைமையைச் சார்ந்தது. இங்கு மரபிலக்கிய வகைமைக்கு புத்திலக்கிய வடிவத்தைக் கொடுத்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலில் வருகின்ற

> **புதுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்**
> **நகுநயம் மறைத்தல் சிதைவு பிறர்க்கு**
> **இன்மையொடுதகுமுறை நான்கே ஒன்றென மொழிப**

என்னும் சூத்திரம் தான் இந்த நூலுக்குப் பொருள். அதாவது அகத்திணையின் களவொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் மெய்ப்பாடுகள் எவை என்பதை தொல்காப்பியர் தெளிவுறுத்தியுள்ளார். பெண்ணினுடைய மனதில் காதல் தோன்றிய பின்னர் அதை அவள் நாணத்தின் மேலீட்டால் மறைக்க முயலுதலே "**நகுநயம் மறைத்தல்**" ஆகும். இதனை தொல்காப்பியம் மெய்பாடு என்கிறது.

மெய்ப்பாடு என்றால் உடம்பில் ஏற்படும் அசைவுகள், மாற்றங்கள் சைகைகள் எனவும் அழைக்கப்படும். இதனை நாடகத்தில் காணலாம். இது சுவை எனவும் அழைக்கப்படுகிறது. அதாவது ஒரு கவிதை படிப்பவர் மனத்தில் படைப்பாளன் நினைத்த, புகுத்திய உணர்வுகளை விளைவிக்கிறது. இங்கு கவிதை நடை வடிவம், சொல், பொருள், அணி பிற உத்திகள் யாவும் இந்தச் சுவையை உண்டாக்கவே பயன்படுவதால் இங்கு கவிதை மெய்ப்பாடும் இலக்கியச் சுவையும் ஒரு கோட்பாடாகவே உருவமைக்கப்படுகிறது. இத்தகைய மெய்ப்பாட்டை வெறும் நாடக மெய்ப்பாடாக மட்டும் விளக்காமல் இலக்கிக் கோட்பாடாக்கிக் காட்டும் சிறப்பினாலேதான் தொல்காப்பியர் ஒரு இலக்கண ஆசிரியர் என்ற நிலையில் இருந்தும் மேம்பட்டு ஒரு கோட்பாட்டாள ராகவும் விளங்குகிறார்.

எனவே தொல்காப்பியர் காட்டிய இந்த மெய்ப்பாட்டு நிலை அகத்துறை மரபில் உயிரோட்டமான ஒரு இடம் வெறும் வெற்று வார்த்தைகளாலோ, சொல்லோவியங்களாலோ இத்துறையை கவிதையாக எழுதமுடியாது. அதற்கு காதல் என்ற உணர்வும் வேண்டும். அதை அனுபவித்து அனுபவ வாயிலாக எழுதியவைகளே இந்தக் கவிதைகள்.

தொல்காப்பிய மூலத்தோடு பெரிதும் முரண்படாது தற்கால நடைமுறைகளுக்கூடாக காதல் உணர்வுகளை பதிய விட்டிருக்கிறேன். இது வெறும் விதைப்பு மட்டும்தான். இத்தகைய மரபிலக்கிய புத்தாக்க முயற்சியில் மரபும் நவீனமும் ஒன்றுபட்டு மரபை புறந்தள்ளாத நவீன இலக்கிய நெறி உருவாக வேண்டும் என்பதே இப்படைப்பு வெளிவரும் நோக்கம் கூட எனலாம்.

இனி, இப்படைப்பு வெளிவர உதவிய அனைத்து நல்ல இதயங்களுக்கும் என்நன்றிகள்.

> பூக்களை நேசித்துப்பார்
> புன்னகை கற்றுக்கொள்ளலாம்
> காதலை நேசித்துப்பார்
> வாழ்க்கையை கற்றுக்கொள்ளலாம்.

*5.12.2010*

கு.றஜீபன்
38, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
k.rajeepan@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பாடு

அன்பே!
புகுமுகம் புரிதலும்
பொறிநுதல் வியர்த்தலும்
நகுநயம் மறைத்தலும்
அதை நீ!
சிதைவு பிறர்க்கு இன்மையொடு
தகுமுறை நான்கும்
ஒன்றினையே உணர்த்தும்.

அன்பே!
உன்மனம் இசைந்ததை
கட்டவிழத்துடிக்கும் மொட்டுப் போல
புன்னகை பூக்கிறாய்.
ஓ! இதுதான் புகுமுகம் புரிதலா?

இயற்கை
மலர்களில் எழுதிய
பனிக்கவிதை போல நாணத்தால்
உன் நெற்றியில் வியர்வைத் துளிகள்.
ஆ!
உனக்குள்ளும் காதல் கனிந்துவிட்டது.
ஆகா! இதுதான்
பொறிநுதல் வியர்த்தலா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை மெய்ப்பாடும்
இங்கிதமாய் வெளிப்பட
ஏனோ.........?
நகுநயம் மறைக்கிறாய்
ஓ!
அன்பின் பரிமளிப்பில் புன்னகை தோன்றுவதை
மறைக்க முயலுகிறாய்.
அற்புதம்!
உந்தன் முயலுதல் கூட
மெய்ப்பாடாகிறதே!

நறுமுகையே! குளிர்நிலவே!
உன்னை
மெய்தொட்டுப் பயிலவேண்டும்
வா! அன்பே! வா!

வேலெறிந்த விழிகளில்
காதல் வந்து சேர்ந்ததோ?
இரும்புபோன்ற மனத்திண்மை
இழகிமெல்லக் கனிந்ததோ?
உறுதி மெல்லக் குலைந்ததை
மறைக்க நீயும் முயலுகிறாய்
இதைத்தான்
பிறர்க்கு இன்மையென
தொல்காப்பியன் உரைத்தானே!



## செப்பனிட்டுக்கொள்

நீ வரமறுத்த பொழுதுகள்
வசந்தத்தின்
கோடைகாலம் என்பேன்.
மலை!
பொத்திவைத்த நீரை
அருவியாகக் கொட்டுவதுமாதிரி
நீயும்
பொத்திவைத்த காதலை
கொட்டிவிடு.

எதுகேட்டாலும்
இல்லையென்கிறாய்
அரசாங்கத்தின்
செய்தித்தொடர்பாளர் போல்

நீ வராமையால்
என் காதலும்
குண்டும் குழியுமாக இருக்கிறது
எமது வீதிகள் போல.
வா! அன்பே!
வந்து என்னை
செப்பனிட்டுக்கொள்!
கடனை எதிர்பார்க்கும்
வறிய நாடுபோல
உன் வரவை
எதிர்பார்த்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் குடில்

நீ!
மேய்ந்துவிட்டுப் போன
காதல் குடிலுக்குள்
இப்போது
ஒழுகத்தொடங்கியிருக்கிறது.
வந்துபார்!
ஒட்டறை தட்டாமலேயே
உருக்குலைந்து போகிறது.
பழசாகிப்போன எம்குடிலை
கட்டியெழுப்புவோம்
எம்தேசத்தைப்போல

கையூட்டு இல்லாத தேசத்தின்
வளர்ச்சிபோல
கலப்படமில்லாத எம்காதலும்
வளரட்டும்.



## பொய்மைதானடி

என் தோட்டத்தில்
செவ்வந்திப் பூக்கள்
வெட்கத்தை
அவிழ்த்து விட்டிருப்பதுபோல
நீ!
அவிழ்த்த வெட்கம்
காதலானது.

என் நேசிப்பு நியாயமானது
அதனால்தான்
உன் பற்களின் அழகை
முத்துக்கள் என்று
பொய்கூறமுடிகிறது

பாதிக்கப்பட்ட பிரதேசத்தை
அமைச்சர்குழு வந்து
பார்ப்பது போலாவது
என்னை வந்துபார்!
அப்போதுதான்
என் காதலின் வலி புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கள் சிந்திய வெட்கம் கவிதையாகியது
மொழிகள் சிந்திய வெட்கம் இலக்கியமாகியது
பெண்மை சிந்திய வெட்கம் காதலானது.



பாதங்கள் வலிக்குமென்று - உன்
பாதைக்கு பூத்தூவினேன்
நீயோ!
சாபங்கள் இடுகின்றாய்.



## புரிவாயா...?

ஓவியரசனை இல்லாத
ஒருவனுக்கு ஓவியத்தை
பரிசளிப்பது போல
உனக்கு
என்கவிதைகளை பரிசளிக்கிறேன்.

எப்போது புரிவாய்
என் கதலை
சிறுபான்மையின்
உணர்வுகள் புரியாத
பெரும்பான்மை போல
எப்போதும்
இறுக்கமாகவே இருக்கிறாயே!

இழகிவிடு
இல்லை இழக்கிவிடு
வேட்டோசை ஓய்ந்த
பொழுதுபோல
உனக்குள் என்வரவு
பூக்களாக மலரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைத்துவிடு

உன்வெட்கத்தைக் கேட்டு
விண்ணப்பித்த மலர்களுக்கு
என்னபதில் கொடுப்பாய்

சேலைஉடுக்காத நிலவாய்
உன்முகம் சிரித்தது கண்டு
எத்தனை நாட்கள்

அடிபெண்ணே!
எங்கே ஒளிந்துகொண்டாய்
ஆசைகள் அசையுமென்று
உன் விழிகளில்தானே
கண்டேன்.



எங்கே!
உன் காந்தள் விழிகளால்
என்னை கரைத்துவிடு.

மரபுகளில் அடைபட்ட
குயிலே!
இறகுகளைச் சுருக்கி
ஏனிந்த மௌனம்.

முழநிலா பொழியும்
கலைஞான இரவில்
என் விழிகளில் தங்கி
விருந்துவை.

நிவாரணத்துக்காய் ஏங்கும்
ஏழையாய் உன்
வரவுக்காய் ஏங்கும்
எனக்கு உன்னைத்தா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அறுவடைசெய்கிறாய்

உன் நினைவுகள் மட்டுமே
எஞ்சியிருக்கின்றன. இனி
இழப்பதற்கு எதுவுமில்லை
என் இனத்தைப்போல

எங்கே!
உன் கடைவிழிப்பார்வையின்
கடைசி எச்சமும்
உலர்ந்துபோனதா?

காதலை விதைத்து
ஏன் சோகத்தை
அறுவடைசெய்கிறாய்
காய்த்த மரமே
உன் கனிமாறுகை எப்போது?



### காதல் கொடி

உன் விழிவரைக்கும்
வந்த காதல் இன்னமும்
வெட்கத்தில் வழுக்கி விழுகிறது.

ஒரு நாட்டின்
நல்ல குடிமகன் போல்
உன்னை நேசிக்கிறேன்
நீயோ! என்னை
பயங்கரவாதியென்று பட்டியலிடுகிறாய்.

உன்மீது நான் தொடுப்பது
கெரில்லா யுத்தம்தான்
உனது விழிப்படைகளுக்கு
அஞ்சித்தானே பதுங்கிக் கொள்கிறேன்.
வா! காதல் கொடியேற்றி
இருவரும்
சமாதானம் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணத்தாழ்ப்பாள்

மாலையின்
மஞ்சள் விரிப்பில்
உன் ஓவியம்காண காத்திருந்தேன்
என்மீது நீ
எறிந்துவிட்டுப்போன பூக்கள்
இன்றும் வாடாமல் இருக்கிறது.
செவ்வந்தி நிறத்தவளே
நீ இசைக்கும் காதல் பல்லவிகள்
இன்னும் என்னை எட்டவில்லை
நாணத்தாழ்ப்பாள் விலக்கி
மோகக்காற்றே என்னை
முட்டிமோதி திறந்துவிடு.



## காதல் கனிவு

நீ!
நேசித்த பொழுதுகளை
நான் சுவாசிக்கிறேன்.
என்னை!
இனிக்க வைத்த
இளநலமே
என்னைக்கண்டு
அசதியாடல் செய்கிறாயா?
அடிபெண்ணே!
காதலும் ஒரு அடுகளம் தானடி
இங்கு
உன்னிடம் தோற்பதில்தானே
காதல் இனிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்னோலையில் வழுக்கிவிழும்**
**நிலவொளியாய்**
**இதயத்தில் வழுக்கிவிழுகிறது**
**உன்நினைவுகள்**



**பனிஇரவில்**
**மலர்ந்திருக்கும் நறுமலரே!**
**முழுநிலவில் வழிந்தொழுகும்**
**பாலொளியில் கனிபிசைந்து**
**மொழிபெறுவேன் உனக்காக**



## காதல் வீரியம்

யுத்தம்
வெடித்துக்கொண்டிருக்கிற
நேரத்தில் கூட
சத்தமே இல்லாமல்
உன்னை காதலிக்கிறது
என் மனது.

துப்பாக்கி
தூக்கியவனை எல்லாம்
பயங்கரவாதி என்கிறாயே
வெட்கமில்லாமல்

என்
இனிமையான நினைவுகளை
அமிலப்பார்வையால்
அழிக்கமுடியாது.

வீழ்ந்தாலும்
வீரியமாய் எழுந்து நிற்கிறேன்
எனக்கானவைகள் எல்லாம்
உன்னிடத்தில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்களின் பொறாமைக்காரி

வசந்தம்
துளிர்ப்புக்கொண்ட
பொழுதாய்
என்வாழ்க்கை
இனிமை கண்டது.

நிலவைத் தூங்கவைத்து
விழித்திருக்கும் விண்மீன்களாய்
எனது விழிப்பு
உனது நித்திரை அழகை
இரசிக்கிறது.

காற்றில் தவழும்
கமுகம்பூ வாசமாய்
எனக்குள்
உன்நினைவுகள்
வாசனையாய் வீசுகின்றன.



நீ
பொத்திவைத்த அழகு
என்னை
சொக்கவைத்துப் போகிறது.
பூக்களின் பொறாமைக்காரி
அத்தனை அழகையும்
பிரமன்
எப்படி உன்னிடம்
கொட்டியிருக்கிறான்.

வந்துபார்!
என்மொழிகூட உன்னால்
அழகானது
என்னைத்தவிர

எனது நேசிப்புக்களை
நிராகரிக்கின்றாய்
மக்களின்
உரிமைகளை நிராகரிக்கும்
ஒரு அரசாங்கம் போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறிய பகல்

ஒரு பூந்தோட்டமாகவேனும்
நீவருவாய் என்ற நினைவோடு
காய்ந்து கிடந்தது உழுதநிலம்
ஆனால்....
எருக்கலம் பூக்களை மட்டுமே
பரிசளிப்பதற்காக
கொண்டுவந்திருக்கிறாய்
வறிய பகலில்
இரைஎதுவும் கிடைக்காது
களைத்துப்போனதொரு பறவையாய்
காத்திருந்தேன் உனக்காக
நீ
அழகான நாட்களை
பரிசளிக்கவில்லையாயினும்
கொடூரமான நினைவுகளை
காட்சிப்படுத்தாதே

வற்றிப்போகும் ஆற்றில்
வசதிகுறைந்த மீனவன்
வலைவீசுவதுபோல
உனக்கான காத்திருப்பு
நீளமானது



## பொத்திவைக்கமுடியாது

உன் புன்னகையில்
வாசமில்லை
எங்கு கற்றாய் இந்த வித்தையை
இன்னும்
எதை மறைக்கிறாய்
மொட்டு வந்துவிட்டால்
மலரை
பொத்திவைக்க முடியாது
உடைத்துவிடு
இதுவொன்றும் ஞாபகப்பரிசல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகான கவிதை

இன்னும் ஏன் மறைக்கின்றாய்
புருவ வில்லால்
விழியம்புகள் விட்டது போதும்
காதல் தானடி என்மேல் உனக்கு
இருந்தும்,
நாணத்தாழ்ப்பாள் போட்டு
ஆசை ஜன்னல்களால்
அசைபோடுகிறாய்
நெற்றியில் வியர்வை,
கண்களில் காதல்
இருந்தும்
ஒளித்துவைக்கிறாய்.
பெண்ணே!
மெய்ப்பாடு உணர்த்தும்
மெய்மை புரியாதா எனக்கு
உள்ளத்தை அறியும் அருமருந்தை
தென்னங்கள் போல திடமாய்
தந்தானே தொல்காப்பியன்.
நாணவேலியை நயமாய் விலக்கி
மொகநிலவே!
முத்தமிட ஓடிவா!



விருந்து படைக்கும்
காதல் கனியே!
தேம்பி அழும் சிறுவனாய்
உனக்காக அழுகிறது
எனது பாடல்வரிகள்.

தமிழில்
இதுவரை எழுதப்பட்ட
அழகான கவிதை
உனது விழிகள் தானடி

பெண்ணணங்கே!
கன்னத்தில் மது ஊறும்
கனிச்சாறே!
இதயத்தில் பூத்த காதல் மலரை
இன்னுமேன் பொத்திவைக்கிறாய்.

வெப்பத்தில் உருகும்
பனிக்கட்டியாய்
உனக்குள் ஒரு மாற்றம்
உன்னை
அழகாய்க் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல்!
பூக்களின் வெட்கம் போன்றது
எப்போதும்
வெட்கியபடியே இருக்கும்
நீ காதலின் வெட்கமானவள்
எப்போதும்
அழகாய்இருக்கிறாய்

இதென்ன விளையாட்டு
ஒருகணம் காதலையும்
மறுகணம் கோபத்தையும்
அள்ளி எறிகிறாயே
நான் எதை எடுத்துக்கொள்ள

என் கண்களில் நிறைந்து
கவிதைகளாய் சிந்துபவளே
உன்னால்தானே
கவிதைக்கு என்மேல்
காதல் வந்தது

மொழியின்
நெளிவு சுழிவுகளை
சந்தமாக்கும் வித்தையாய்
உன் அசைவுகளை எல்லாம்
காதலாகப் பாடுகிறேன்



## களவாடிவிட்டாயே

பெண்ணவளே!
உன்னைப்பாடும் மயக்கத்தில்
திணைமயக்கம் கூட தெரிவதில்லை.
குறும்புக்காரி!
சிக்கனமாய் நான் சேமித்த
என்னை!
களவாடிவிட்டாயே!

விருந்துபடைக்கும் வெண்ணிலாவே!
கரும்பினும் இனிய காதல் சுவையை
இன்னுமா நீ! உணரவில்லை.

என் கண்கள் நிறைய கனவுகள்
உன்னை காதலிக்கிறேன்.
அழகை
மூடிவைக்க முடியாது
காதலை
ஒளித்து வைக்கமுடியாது.

உன்னை
பறிக்காமல் இருப்பதற்கு
நீ! காயல்லவே!
முற்றிக்கனிந்து விட்டாய்
இனி தொட்டுக் கொள்ளலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூக்களின் விருந்துப்**
**பொழுதுகள்**
**தென்றலால் நிறைவது மாதிரி**
**எனது இனிமைப் பொழுதுக**
**உன்னால் நிறைகிறது.**

**வண்ணங்கள் பூசாமலேயே**
**அழகாய் இருக்கிறாய்**
**ஓ!**
**உனக்குள்ளும்**
**காதல் பூத்துவிட்டது.**





## காதல் செய்வோம்

நீ! வேற்படையும்
நான்! வாட்படையும்
வைத்திருப்பதில் என்ன பயன்
காதல் என்று வந்துவிட்டால்
ஆயுதத்தை
போட்டுத்தானே ஆகவேண்டும்.
இப்போது
நிராயுத பாணியாக நிற்கும்
என்மேல் நீ
வேற்படை கொண்டு
தாக்குவதில் ஞாயமில்லை.
இனி என்னிடம்
இழப்பதற்கு எதுவுமில்லை.
குறிஞ்சியில் கொடியேற்றிய
அகளங்கன் நான்.
உனக்காக கீழிறங்கி வந்துள்ளேன்.
என்காதலை புரிந்துகொள்!
வா!
ஆயுதங்கள் கீழேவைத்து
காதல் செய்வோம்.
பூக்கள் சிரிப்பதற்கு
புல்லாங்குழல் போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சிப்புலமெங்கும்

வசந்தம் கொட்டிய
நினைவுப் பூக்களில்
உனது வெட்கம் கண்டேன்

பிரமன்படைக்காத நறுமுகையே!
வா!
அற்றைத்திங்களில்
அவ்வெண்ணிலாவொளியில்
மெய்தொட்டுப் பயிலுவோம்.

கண்ணே!
என்விழிகளுக்கு
கனவு கொடுத்தாய்
உன்னைக் கண்டபிறகுதானே
உலகமும் அழகாய்த்தெரிகிறது.

என் காட்சிப் புலமெங்கும்
நீயிருக்கிறாய்
கவிதைமொழியெங்கும்
முறுவலிக்கிறாய்

விழிகளில் வேற்படையும
இதழ்களில் கனிச்சுவையுமான
அகமும் புறமும்
ஒருங்கே அமைந்த
இலக்கிய அற்புதமே!
அகத்திணை ஏழில்
நான்!
எங்கு நிற்கிறேன்.

கண்ணே!
மடலேறி வரைபாயுமுன்
வந்துவிடு

வெட்கத்தில்
விரிந்த முல்லையே
பக்கத்தில் வரவே
நெருப்பள்ளி எறிகிறாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னில்
கொடியேறி பூத்திருக்கு
காதல்
அதை
என் மடிமீது கொட்டிவிடு

பிடிவாதக்காரி
உரிமைகள் தரமறுக்கும்
ஒரு அரசாங்கம் போல
இறுக்கமாகவே இருக்கிறாயே!

என் கண்கள் நிறைய
கனவுகள்
உன்னைக் காதலிக்கிறேன்.
அழகை
மூடிவைக்க முடியாது
காதலை
பொத்திவைக்க முடியாது.




## காதல் அதிர்வுகள்

மனது நிறைந்திருக்கிறது
பூக்களின் அழகை
இப்போதுதான் இரசிக்க முடிகிறது.
எனக்குள் எழும் மாறுதல்கள்
உனது ரம்மியமான நினைவுகளில்
கவிதைகளை நேசிக்க கற்றுக்கொள்கிறேன்.
வந்துபார்! இப்போது
என்கண்கள் கூட அழகாக இருக்கிறது
கல்நெஞ்சக்காரி!
இத்தனை அதிர்வுகளையும்
எப்படி உன்னால்
பொத்திவைக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கள் என்றும் வண்டைத்தேடும் – என்
கண்கள் இரண்டும் உன்னைத் தேடும்



விக்கலுக்கு நீர்போல – என்
வேதனைக்கு நீவேண்டும்



## அழகாய் பூத்திருக்கிறாய்

எனது
எல்லாக் கனவுகளையும்
நிறமூட்டுவதற்காய் வந்தாய்
வெட்கத்தில் வழுக்கி
இமைகள் இறங்கியபோது
வண்ணங்கள் சிந்தி காதலானது

உன்னைக் காணும்போது
குளிர்வண்ணங்களை மட்டுமே
கனவுகளுக்குக் கொடுக்கிறாய்
இருந்தும் ஏன்
அசைவச்சம் கொள்கிறாய்.

உன்
காதல் பூந்தோட்டத்தில்
என்னை மட்டும் உலாவவிடு
எத்தனை அழகாய் பூத்திருக்கிறாய்
ஆனால்
ஒற்றைப் பூவைக்கூட
பறிப்பதற்கு மறுக்கிறாய்
பூந்தோட்டக் காரனுக்கே பூக்கள் இல்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைக்குழந்தைகள்


அன்பே!
காதலின் ஒவ்வொரு வலியும்
கவிதைதானடி
வெட்கத்தில் நாணும் விருந்தே!
உன் விழியில் பொங்கும் காதல்
கடைவிழியால் தெரிகிறது
இன்னும் ஏன் மறைக்கிறாய்
ஓ! இதுதான்
நகுநயம் மறைத்தலா?
என்
இரவுகள் எல்லாம்
உன்னால்தானே இனிமையானது



மீண்டும் மீண்டும்
என்கனவுகளை கர்ப்பமாக்குகிறாய்
பிரசவவலியோடு
குழந்தை பெறுவதுமாதிரி
நான் பிரசவிக்கும்
கவிதைக் குழந்தைகளைப்பார்!
வெட்கத்தை அவிழ்த்து
விளக்கேற்ற வா!
வந்துபார்!
வாழ்ந்துபார்ப்போம்
குளிர்காலத்தில்
குளிக்கத்தயங்கும் குழந்தைபோல
ஏன் அஞ்சுகிறாய்
பொத்திவைத்த காதலை
கொட்டிவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org